# 8086

Register Number | | | | | |

**Part III**

## செவிலியர் - NURSING

( Tamil Version )

நேரம் : 3 மணி] [ மொத்த மதிப்பெண்கள் : 150

பிரிவு அ — **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

பிரிவு ஆ — ஏதேனும் **பதினைந்திற்கு** விடையளி.

பிரிவு இ — வினா எண். 71-க்கு கட்டாயமாகவும், வினா எண்கள் 72 முதல் 77 வரை உள்ளவற்றில் ஏதேனும் **ஐந்திற்கும்** சுமார் 100 சொற்களில் விடையளி.

பிரிவு ஈ — ஏதேனும் **நான்கு** கேள்விகளுக்கு சுமார் 200 சொற்களில் விடையளி.

### பிரிவு – அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

I. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உங்கள் விடைத்தாளில் எழுதுக: 10 × 1 = 10

1. ஸ்டோமடைட்டிஸ் என்பது எதில் ஏற்படும் அழற்சி ஆகும் ?

அ) வயிறு ஆ) அடிவயிறு

இ) வாய் ஈ) நாக்கு.

2. குடலின் வயிற்றுக் குழி இறக்கத்தை என்னவென்று கூறுவோம் ?

அ) குடல் இறக்கம் ஆ) பெமரல் ஹெர்னியா

இ) தொப்புளில் குடல் இறக்கம் ஈ) ஹெர்னியா.

[ Turn over

3. திசுக்களின் வளர்கிற மாற்றத்தினை சீராக்குகிற திசுக்களின் வளர்ச்சிக்கு எது உதவுகிறது ?

அ) மினரல் ஆ) புரதம்

இ) கொழுப்பு ஈ) வைட்டமின்.

4. தாயின் முதல் பால் ( கொலஸ்ட்ரம் ) எந்த நிறத்தில் இருக்கும் ?

அ) வெள்ளை ஆ) சிவப்பு

இ) நிறமற்றது ஈ) மஞ்சள்.

5. குரல்வளை சுரப்பி வீக்கம் என்பது

அ) இடத்தன்மையால் ஆ) கொள்ளை நோய்

இ) பெரும் பரப்பு நோய் ஈ) சிதறலானது.

6. இரத்தத்தில் ஹீமோகுளோபினை உண்டாக்க இது தேவைப்படுகிறது.

அ) புரதம் ஆ) இரும்புச் சத்து

இ) கொழுப்பு ஈ) கால்சியம்.

7. புழுக்களை கொல்லும் மருந்தின் பெயர்

அ) ஆஸ்பிரின் ஆ) லாசிக்ஸ்

இ) ஜெலுசில் ஈ) மெபன்டஸால்.

8. குடல் வால் அழற்சி என்பது ஒரு நோய்த் தொற்றாகும். இது எங்கு ஏற்படும் ?

அ) குடலில் ஆ) அப்பென்டிக்ஸ்

இ) சீக்கம் ஈ) சிறுகுடல்.

9. குவாஷியார்க்கர் வருவதற்கான காரணம்

அ) கார்போஹைடிரேட் ஆ) இரும்புச்சத்து

இ) புரதம் ஈ) வைட்டமின்.

10. இதில் எது காலரா வருவதற்கான காரணம் ?

அ) மைகோபாக்டீரியம் ஆ) ரூபலா

இ) ஃபங்கி ஈ) விப்ரியோ காலரே.

II. கீழ்க்கண்டவைகளுக்கு சரியா, தவறா என்பதை எழுதுக: $10 \times 1 = 10$

11. 1-5 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் A சொட்டு மருந்து, ஆறு மாதத்திற்கு ஒரு முறை கொடுக்கப்பட வேண்டும்.

12. பிறந்த குழந்தைக்கு ஒரு வாரத்திற்குள் B.C.G. தடுப்பு ஊசி போடப்பட வேண்டும்.

13. தாய்ப்பால் இயற்கையாகவே எப்பொழுதும் தயாராக உள்ளது.

14. நுண்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி வாய் சுத்தம் செய்யலாம்.

15. அமினோரியா என்பது மாத விலக்கு சுழற்சி.

16. கருவுறா பெண்ணின் கருப்பை 60 கி. எடையும், பிரசவ சமயத்தில் 900—1000 கி. ஆகவும் இருக்கும்.

17. மலேரியா ஒட்டுண்ணிகள் மலேரியாக் காய்ச்சலை உண்டாக்குகின்றன.

18. பல் சொத்தை முக்கியமாக வைரஸ்கள் மூலம் தான் ஏற்படுகிறது.

19. மூளையின் நியூரான்களில் ஏற்படும் மாற்றத்தினால் வலிப்பு நோய் ஏற்படுகிறது.

20. தாய்ப்பாலை குறைந்தது 6-9 மாதம் வரை தொடர வேண்டும்.

[ Turn over

III. கோடிட்ட இடத்தை நிரப்புக: 20 × 1 = 20

21. ........................ தோலில் படர்தாமரை ( Ringworm ) நோயையும் மற்றும் வாய்ப் பகுதியில் மென்புடைப்பு ( Oral thrush ) நோயையும் உண்டாக்குகின்றன.

22. அறுவை சிகிச்சை செய்யாத உதவியாளர்கள், மேஜைக்கு ........................ பயன்படுத்தி தொற்று நீக்கியப் பொருட்களைக் கொண்டு வந்து தரலாம்.

23. உணவூட்டம் என்ற வார்த்தை ........................ என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.

24. சரியான ஊட்டச்சத்து உணவுகளை உண்ணாத அல்லது போதிய அளவு ஊட்டச்சத்துக்களை உண்ணாத ஒருவர் ........................ உடையவராவர்.

25. இயற்கையான இனப்பெருக்கத்திற்கு ........................ தேவைப்படுகிறது.

26. நிகோடினிக் அமிலப் பற்றாக்குறை நோய்க்கு ........................ என்று பெயர்.

27. வைட்டமின் $B_{12}$ ........................ அணுக்களை உண்டாக்கத் தேவைப்படுகின்றன.

28. ........................ என்பது நொறுங்கும் தன்மையுடைய எலும்புகள் சிறு விபத்திலும் கூட எலும்பு முறிவு ஏற்படக்கூடும்.

29. இரத்தத்தில் ஹீமோகுளோபினை உண்டாக்க ........................ தேவைப்படுகிறது.

30. கருவுற்றிருக்கும் காலத்தில் அயோடின் குறைவால் குழந்தைகளுக்கு ........................ நோய் உண்டாகும்.

31. உடல் திரவங்களின் முக்கிய பாகமாக ........................ உள்ளது.

32. கைக்குழந்தைகளுக்கு ........................ மிகச் சிறந்த உணவு.

33. கடுமையான ........................ பாதிப்பு மற்றும் இரத்தத்தில் அதிக அளவு யூரியா உள்ளவர்க்கு புரதம் குறைந்த உணவு தரப்படும்.

34. ........................ அளவுக்கு மீறிய பருமன் அல்லது இருதய நோய் உள்ள நோயாளிக்கு தரப்படும்.

35. ........................ அல்சர் எனப்படுவது வயிறு அல்லது சிறுகுடலின் முன் பகுதியின் சுவர்களில் நீண்ட நாள் உள்ள புண் ஆகும்.

36. ......................... நோய் கணையம் சுரக்கும் ஹார்மோனாகிய இன்சுலின் குறைவுபடுவதால் வருகிறது.

37. ......................... இது தயிரிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

38. ......................... மருந்துகள் உறக்க நிலையை உண்டாக்குபவை.

39. ......................... என்பது ஒழுங்கற்ற அசாதாரணமான காலம் தாழ்த்தி மலம் கழித்தலாகும்.

40. முக எலும்புகளிலுள்ள சிறு காற்றறைகள் நோய்த்தொற்றால் தாக்கப்படுவதை ......................... என்று அழைக்கிறோம்.

IV. பொருத்துக : 10 × 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 41. | சீட்டில் இடுக்கி | அ) | சிறுகுடலின் முன்பகுதி |
| 42. | கரோட்டின் | ஆ) | முக எலும்பு |
| 43. | பெல்லாக்ரா | இ) | பாக்டீரியா |
| 44. | பெப்டிக் அல்சர் | ஈ) | நிக்கோடினின் அமிலம் |
| 45. | சைனசைட்டிஸ் | உ) | அறுவை சிகிச்சை முறை |
| 46. | காலரா | ஊ) | தயிர் |
| 47. | பற்குழி | எ) | பரோடிட் |
| 48. | வே வாட்டர் | ஏ) | ஹைப்பாடிட்டிஸ் |
| 49. | புட்டாளம்மை | ஐ) | தண்ணீர் |
| 50. | கல்லீரல் அழற்சி | ஒ) | வைட்டமின் A. |

[ Turn over

## பிரிவு - ஆ

V. கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் பதினைந்திற்கு இரண்டு வரிகளில் சிறுகுறிப்பு எழுதுக: $15 \times 2 = 30$

51. நோய்த்தொற்று - பொருள் கூறுக.

52. வைரஸ்கள் - பொருள் கூறுக.

53. கொசுவை எவ்வாறு கட்டுப்படுத்துவாய் ?

54. வைட்டமின் சி பற்றாக்குறை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

55. மராஸ்மஸ் - விவரி.

56. சரிவிகித உணவு என்றால் என்ன ?

57. குடல் இறக்கம் என்றால் என்ன ?

58. மருந்து என்றால் என்ன ?

59. புட்டாளம்மையின் நோய் நுண்ம பெருக்க காலம் யாது ?

60. இந்தியாவில் தேசிய பார்வையற்றோர் கட்டுப்பாடு திட்டம் ஆரம்பித்த வருடம் எப்பொழுது ?

61. சுகாதார சமூக செவிலியரின் பணிகளைக் கூறுக.

62. செவிலிய மனநலத்தை வரையறு.

63. மகப்பேறு வரையறு.

64. கருப்பை சுவர்களின் அடுக்குகள் யாவை ?

65. கருச்சிதைவின் வகைகளைக் கூறுக.

66. திட உணவினை அறிமுகப்படுத்துதல் என்றால் என்ன ?

67. மாதவிடாய் நின்று போதல் என்றால் என்ன ?

68. வீட்டை பார்வையிடுதலின் நோக்கம் கூறுக.

69. பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுகாதாரம் - விவரி.

70. பால் சொட்டுதல் ( Milk drip ) என்பதைப் பற்றி எழுதுக.

## பிரிவு - இ

VI. கீழ்க்கண்டவற்றில் **வினா எண் 71** க்கு கட்டாயமாகவும் மற்றும் வினா எண்கள் 72 முதல் 77 வரை உள்ளவைகளில் எவையேனும் **ஐந்திற்கு** 100 வார்த்தைகளில் விடை எழுதுக : $6 \times 5 = 30$

71. சளித் துளிகள் மூலம் பரவும் தொற்றை எவ்வாறு தடுப்பாய் ?

*அல்லது*

நீரில் கரையும் உயிர் சத்துக்கள் பற்றி எழுதுக.

72. உணவின் வகைகள் யாவை ?

73. தேசிய பைலேரியா கட்டுப்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகளைக் கூறுக.

74. தேசிய உத்தியில் ஆட்கொல்லி நோய்க்கான ( AIDS ) அம்சங்கள் யாவை ?

75. மகப்பேறு மருத்துவத்தின் மகப்பேறு முறை யாது ?

76. இரண்டாவது மூன்று மாத கர்ப்பத்தில் ஏற்படும் சிக்கல்கள் யாவை ?

77. எனிமா கொடுப்பதன் அவசியங்கள் யாவை ?

## பிரிவு - ஈ

VII. கீழ்வருவனவற்றில் ஏதேனும் **நான்கினுக்கு** 200 சொற்களில் விடை எழுதுக: 4 × 10 = 40

78. மேல் மூச்சுப் பாதையைத் தாக்கும் தொற்றுகள் யாவை ?

79. பெப்டிக் அல்சரின் முக்கிய நோய் நிலைகளின் திட்ட உணவுகளைப் பற்றிக் கூறுக.

80. மலேரியா நடவடிக்கை திட்டத்தின் நோக்கங்கள் யாவை ?

81. காச நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து எழுதுக.

82. கர்ப்ப காலத்தில் சுகாதாரத்தை பேணும் முறையை எழுதுக.

83. வீட்டில் நீரை எவ்வாறு சுத்தம் செய்வாய் ?